**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 250/2019**

**பி.வா.சா.1 – கோமதி**

**<u>09–07–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

13. அம்மாசை நாடாருக்கு அவர் இறக்கும் வரை அவர் மனைவி லட்சுமி தான் உணவு கொடுத்து பராமரித்து வந்தார் என்றால் சரிதான். அம்மாசை நாடார் இறக்கும் வரை கணவர் மனைவி இருவரும் ஒற்றுமையாகதான் வாழ்ந்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள உயிலில் அம்மாசை நாடார் அவர் மனைவி லட்சுமிக்கு எந்த சொத்தையும் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான். உயிலில் லட்சுமிக்கு சொத்து எழுதாததர்க்கு காரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது அப்பா மேற்படி தம்பதியனறுக்கு மூத்த மகன்.

14. எனது தந்தைக்கு நானும் வாதியும், 5ம் பிரதிவாதியும் மகள்கள். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 உயிலில் வாதி மற்றும் 5ம் பிரதிவாதிக்கு எந்த சொத்தும் காட்டப்படவில்லை. வாதி மற்றும் 5ம் பிரதிவாதிக்கு சொத்துக்கள் கொடுக்கப்படாததர்க்கு எனது தாத்தா பி.வா.சா.ஆ.1 உயிலில் குறிப்பிட்டு காரணம் சொல்லவில்லை. இன்றாவது பி.வா.சா.ஆ.1 உயிலின் அசல் ஆவணத்தை நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேனா என்றால் இல்லை. ஏன் அசல் உயிலை நீதிமன்றத்திற்கு கொண்டுவரவில்லை என்றால் தெரியவில்லை. பி.வா.சா.ஆ 1 உயிலின் அசல் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டால் அது மோசடியான ஆவணம் என்பது தெரியவரும் என்பதால்தான் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

15. பி.வா.சா.ஆ.1 உயில் கவுண்டம்பாளையத்தில் தங்கவேல் என்ற பத்திர எழுத்தரின் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. நான் சுமார் காலை

10.00 மணிக்கு பத்திர எழுத்து அலுவலகத்திற்கு சென்றேன். பத்திர எழுத்தர் 11.00 மணியளவுல் அலுவலகத்திற்கு வந்தார். என்னுடன் யார் அங்கு வந்தார் என்றால் நான் மட்டும் தான் சென்றேன். எனது அப்பாவும் தாத்தாவும் ஏற்கனவே பத்திர எழுத்தரின் அலுவலகத்தில் இருந்தார்கள். தாத்தாவை எனது அப்பா கார் வைத்து அழைத்து வந்தாரா என்றால் இல்லை, எனது தாத்தா பஸ்சில் வந்தார். நான் பத்திர அலுவலகத்திற்கு சென்றபோது எனது அப்பாவும் தாத்தாவை தவிற வேறு யாரும் இல்லை.

16. 11.00 மணிக்கு தங்கவேல் பத்திர எழுத்தர் வந்த பிறகு வேறு யாரும் அங்கு வரவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை யார் தயார் செய்தார் என்றால் பத்திர எழுத்தர் தயார் செய்தார். தங்கவேல் 11.00 மணிக்கு அலுவலகம் வந்தபோது தான் பி.வா.சா.ஆ.1 ஐ தயார் செய்தார் என்றால் சரிதான். அதற்கு முன்பு நானோ எனது அப்பாவோ, தாத்தாவோ தங்கவேலிடம் சென்று உயிலை தயாரிக்க சொல்லவில்லை என்றால் சரிதான். உயிலை தயாரிக்க எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் 45 நிமிடங்கள் ஆனது. உயில் தயாரிப்பதற்கு முன்பு அதன் டிராப்ட் எழுதப்பட்டதா என்றால் ஒரு பேப்பரில் எழுதப்பட்டு எனது தாத்தாவிடம் காண்பிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டு, பின்பு டைப் செய்ய கொண்டு சென்றார்கள்.

17. அந்த டிராப்டை தங்கவேல் அவர் கைப்பட எழுதியிருந்தார். அசல் உயிலை தங்கவேலே டைப் செய்தாரா என்றால் இல்லை, அருகே இருந்த வேறு ஒரு டைப் நிறுவனத்தில் ஒரு பெண் டைப் செய்து கொடுத்தார். டைப் செய்வதற்கு பத்திரத்தை தங்கவேல் தான் எடுத்துச்சென்றார். டைப் செய்வதற்கு 45 நிமிடம் ஆகியிருக்குமா என்றால் இல்லை 15 நிமிடம் தான் ஆகியது. எனது தாத்தா எங்கு வைத்து கைரேகை வைத்தார் என்றால் கைரேகை வைக்கவில்லை, பதிவு அலுவகத்தில் வைத்து கையொப்பம் செய்தார். பதிவு

அலுவகத்தில் எந்த அறையில் கையொப்பம் செய்தார் என்றால் நான் உள்ளே செல்லவில்லை பத்திரஎழுத்தரும் எனது தாத்தாவும் உள்ளே சென்று கையொப்பம் செய்தார்கள்.

18. அப்போது பதிவு அலுவலகத்திற்குள் எனக்கு தெரிந்த நபர்கள் யார் யார் இருந்தார்கள் என்றால் எனது ஊரைச்சேர்ந்த சண்முகம் மற்றும் பலர் இருந்தார்கள். என்னுடன் வேறு யார் பதிவு அலுவலகத்திற்கு வந்தார்கள் என்றால் நான் எனது அப்பா, தாத்தா, பத்திர எழுத்தரைத் தவிற வேறு யாரும் இல்லை. எனது தாத்தா பத்திரத்தில் கையொப்பம் செய்யததை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நானோ எனது அப்பாவோ, தாத்தாவோ வேறு யாரையும் உயில் எழுத அழைக்கவில்லை என்றால் சரிதான். எத்தினை மணிக்கு பதிவிற்கு தாக்கல் செய்தார்கள் என்றால் 12.00 மணிக்கு மேல் தாக்கல் செய்தார்கள். எத்தினை மணிக்கு அங்கு இருந்து கிளம்பி வந்தோம் என்றால் சுமார் 01.30 அல்லது 02.00 மணி இருக்கும்.

19. திரும்ப வரும்போது வேறு யாரும் வரவில்லை நாங்கள் நால்வர் மட்டும் தான் வந்தோம். தங்கவேல் அவரது அலுவகத்திற்கு சென்றுவிட்டார் நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். எனது அப்பா பொன்னாச்சிபுதூரில் வசிக்கிரார். அவர் நல்ல நிலமையில் உள்ளார் என்றால் இல்லை, 5-6 வருடமாக கை கால் வராமல் உள்ளார். நல்ல ஞாபக சக்தியுடன் உள்ளாரா என்றால் உள்ளார். உயில் எவ்வளவு ரூபாய் முத்திரைத்தாளில் எழுதப்பட்டது என்றால் ரூ.20 ரூபாய் முத்திரைத்தாளில் எழுதப்பட்டது. முத்திரைத்தாளை யார் வாங்கி வந்தார் என்றால் ரோட்டை எனது தாத்தாவால் கிராஸ் செய்ய முடியாததால் பத்திர எழுத்தர் சென்று வாங்கி வந்தார்.

20. யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் எனது தாத்தா பெயரில் முத்திரைத்தாள் வாங்கப்பட்டது. உயில் தட்டச்சு செய்யப்பட்டது, கணிப்பொறியில்

செய்யப்படவில்லை, அப்போது கணிப்பொரி இல்லை. உயிலை எவ்வளவு நாளில் பதிவு அலுவலகத்தில் இருந்து திருப்பு கொடுத்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை எனது தாத்தா சென்று வாங்கி வந்திருப்பார். நான் பத்திர அலுவலகத்திற்கு ஈரோட்டில் இருந்து பஸ்சில் சென்றேன் எனது தாத்தாவும் அப்பாவும் பஸ்சில் தான் வந்தார்கள். இதற்கு முன்பு 2007ம் ஆண்டு எனது தாத்தா எழுதி வைத்து வா.சா.ஆ.4 உயிலில் அவரது மனைவிக்கு உரிமை கொடுத்தும், அதன் பிறகு அவரது மகனான எனது அப்பாவிற்கு உரிமை கொடுத்தும், அதன் பிறகு எனக்கும் வாதிக்கு உரிமம் கொடுத்து எழுதியுள்ளார் என்றால் சரிதான்.

21. அந்த வா.சா.ஆ.4 அசல் உயில் என் வசம்தான் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும். வா.சா.ஆ.4 உயிலை எழுதிய பிறகு எனது தாத்தா உடல் நிலை மற்றும் மனநிலை சிறிது சிறிதாக பாதிக்கப்பட்டு அவர் சுயமாக சிந்தித்து செயல்படம் மனநிலையில் இல்லாமல் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. எனது தாத்தா சுயமாக சிந்திக்கும் நிலை இழந்து திடகாத்திரமாக இல்லாதபோது தான் நான் அந்த சூழ்நிலையை பயன்படுத்தி பி.வா.சா.ஆ.1 உயிலை நான் மோசடியாக ஏற்படுத்திகொண்டேன் என்றால் சரியல்ல. எனது அப்பா என்னுடன் நல்ல உறவில் இருந்து வருகிறார்.

22. எனது அப்பாவிற்கும் யசோதாவிற்கும் 15-20 ஆண்டுகளாகவே பேச்சுவார்த்தை இல்லை. தாவா சொத்தில் யசோதா குடியிருந்து வரும் அவரது சுவாதீனத்தை 23.08.2019ம் தேதியன்று நான் ஆட்களுடன் சென்று இடையூறு செய்தேன் என்றால் சரியல்ல. என்னுடன் சாட்சி சொல்ல வந்திருக்கும் ருக்னுதீன் என்பவரை நான் தான் அழைத்து வந்தேன். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் மோசடியானது என்றும், எனது தாத்தா நல்ல மனநிலையில் எழுதி வைத்த வா.சா.ஆ.4 உயில் ஆவணம்

தான் செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ன் படி எனது தாத்தாவின் ஆயுல் பாத்தியமும் பாட்டியின் ஆயுள் பாத்தியமும் முடிந்துவிட்டது என்றால் சரிதான். தற்போது எனது அப்பாவின் ஆயுள் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான்.

23. அப்பாவின் ஆயுள் காலத்திற்கு பின்னிட்டு எனது தாத்தாவிற்கு தாவா சொத்தில் பாத்தியப்பட்டு இருந்து 1/3 பாகம் எனக்கும் யசோதாவிற்கும் முழுமையாக சேரத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்து பிதுராசித வகையில் பாத்தியப்பட்டது என்பதால் தற்போது 1/12 பாகம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நான் அடியாட்களுடன் வாதியின் சுவாதீனத்தை இடையூறு செய்ததால் வாதி கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்தவதற்கு முன்பு தாவா சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த முயற்ச்சி செய்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் வாதி வில்லங்கம் ஏற்படுத்தக் கூடாது என்று பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் மோசடியாக ஏற்படுத்திய உயிலின் அடிப்படையில் வாதிக்கு தாவா சொத்தில் உள்ள உரிமையை முறியடிக்க முயர்சிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.07.09 18:21:32 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.